# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2073 - 2018 මැයි මස 25 වැනි සිකුරාදා - 2018.05.25

*2073 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 70 |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 70 |


***கவனிக்க.***– குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் (திருத்தம்) சட்டமூலம் 2018, மே மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2018, யூன் மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூன் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

69- B 81284- 353 (2018/05)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## 141/MB ம் இலக்க வழக்குடன் தொடர்புடைய மாரவில மாவட்ட நீதி மன்றின் பிசுக்கால் மூலம் செய்யப்படுகின்ற பெறுமதியான ஆதனம் ஒன்றினை பிரசித்த ஏல விற்பனை மூலம் விற்பனை செய்தல்

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில காணிப் பதிவகப் பிரிவிற்கு உட்பட்ட பிடிகல் கோரளை தெற்கு மத்திய பகுதி, நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள, நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, இல. 504/B பஹல மாவில கிராம உத்தியோகத்தர் பிரிவின் மூதுகட்டுவ என்ற கிராமத்தில் அமைந்துள்ள "நிக்ககெலே வத்தை" என்ற காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. டபிள்யூ. எல். எச். பிரனாந்து அவர்களால் 2010.08.24 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 9620 ஆம் இலக்க வரைபடத்தின் 01 ஆம் இலக்க எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணி.

**காணியின் பரப்பளவு** : 00 ஏக்கர் 00றூட் 19பேர்ச்சஸ்

காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை மற்றும் கட்டிடங்கள் அனைத்தும் அடங்கலாக. 2346/97ஆம் இலக்க வரைபடத்தின் 03 ஆம் இலக்க 10 அடி அகலமான பாதையை பொதுவான பாதையாகப் பாவிப்பதற்கான உரிமையுடன் இது மாரவில காணிப்பதிவகத்தில் K 128/30 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை.**- A3 பிரதான பாதையின் ஊடாக மாரவிலயிலிருந்து நீர்கொழும்பு பக்கம் 2 கிலோ மீட்டர் அளவு சென்றவுடன் பாதையின் இடது பக்கமாக மாரவில அரச வைத்தியசாலை காணப்படும். அதைத் தாண்டி சுமார் 200 மீட்டர் அளவு சென்றவுடன் இடது பக்கமாக உள்ள மாரவில பாதையில் சுமார் 600 மீட்டர் அளவு சென்று (இத்தாலியன் கேட்டை தாண்டியவுடன்) வலது பக்கமாக உள்ள பாதையில் சுமார் 300 மீட்டர் அளவு சென்றவுடன் இடது பக்கமாக ஒரு பாதை காணப்படும். அந்தப் பாதையின் இறுதியில் அடகு வைக்கப்பட்ட இந்த ஆதனம் அமைந்துள்ளது.

2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பிரதி பிஸ்கால் மூலம் ஏல விற்பனை செய்யப்படும்.

**பணம் செலுத்தும் முறை.**-ஏல விற்பனையின் இறுதியில் ஆதனத்தை வாங்கியவர் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பணத்தைச் செலுத்துதல் வேண்டும் :-

1. வாங்கிய விலையின் (நூற்றுக்கு இருபத்தி ஐந்து) 25;
2. மாகாண அதிகார சபைக்கான விற்பனை வரியாக (நூற்றுக்கு ஒன்று) 1%;
3. பிசுக்கால் கமிஷனாக விற்பனை விலையின் (நூற்றுக்கு இரண்டரை) 2.5%;
4. அனைத்து விளம்பரக் கட்டணங்கள்;
5. எழுதுவினைஞர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500;
6. விற்பனைச் செலவுகள், வேறு கட்டணங்கள் இருப்பின் அந்தப் பணம்;
7. விற்பனை அத்தாட்சிப்பத்திரத்துக்கான முத்திரைக் கட்டணம்.

வாங்கிய விலையின் மிகுதி 75% மான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படல் வேண்டும். மேற்கண்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட முழுத் தொகையையும் செலுத்தாவிடின் ஏற்கனவே செலுத்திய பணத்தை திருப்பிச் செலுத்தாமல் விடவும், மீண்டும் ஆதனத்தை ஏல விற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

உரிமைப் பத்திரம் மற்றும் ஏனைய ஆவணங்களைப் பரிசீலிப் பதற்கும் மேலதிக விபரங்களைப் பெறுவதற்கும் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய பிரதான அலுவலகம், (முதலாம் மாடி) இல. 79, மாரவில வீதி, நாத்தாண்டிய என்ற முகவரியை நாடவும்.

பதிவாளர்/பிரதி பிசுக்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
மாரவில.

தொலைபேசி :- 032-2253300, 032-2253301,
பெக்ஸ் :- 032-22552470

05 - 745

# நானாவித அறிவித்தல்கள்

## தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

பந்துல குணவர்தன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், "தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சபாவைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. பௌத்த நெறியுடனான பரிநிர்வாணத்தை நோக்கமாகக் கொண்ட சங்கல்ப பூஜைக்கு முன்னுரிமை அளித்துச் செயற்படும் பொதுநிலையினரையும் துறவிகளையும் உருவாக்கல்;

2. மேற்குறிப்பிட்ட நான்கு வகையினரின் சமய அறிவு கருதி அறநூல்களை வெளியிடுதல் மற்றும் புதியோர்களுக்காக அன்றாடம் சீலம், சாந்தி, மெய்யறிவை வளர்த்தல், அறநெறி கலந்துரையாடல்களை நடாத்துதல் மற்றும் தம்மபோதனைகளை செவிமடுப்பதற்கு வாய்ப்பேற்படுத்திக்கொடுத்தல் ;

3. அறநெறிச் சபைகளுக்கு சொந்தமான நிறுவனங்களில் நான்கு வகையினரின் ஒழுக்கநெறி கருதி தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த மகாதேரரினால் போதிக்கப்பட்ட மத அலுவல்களை பாதுகாத்து நடைமுறைப்படுத்தல்;

ஆகியன இந்த தஹம் சபாவின் விஷேச குறிக்கோள்களாகும்.

பந்துல குணவர்தன,
பாராளுமன்ற உறுப்பினர்.

05 - 598

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.